DEPOSITION OF WITNESS
---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC .No. | : | 4/2014 |
| Deposition of Witness for | : | P.W.5 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சேசுராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேக்காரைக்குடியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியாது. சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் அப்போது அங்கு இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. என்னை போலீஸார் என்னை விசாரித்தார்கள். (அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை:**

**1.** நான் கடந்த 01.08.2013 ம் தேதியில் மதியம் சுமார் 2 மணியளவில் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் அழைத்ததன் பேரில் நானும் எங்கள் ஊர் மாரி மகன் மணி என்பவரும் முப்பையூர் பேருந்து நிலையம் சென்றோம் என்றும் அங்கு காவல் துறையினரால் பிடித்து வைத்திருந்த எங்கள் ஊர் சங்கன் மகன் ராமச்சந்திரன் என்பவர் நடந்த சம்பவம் குறித்து காவல் துறையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும் தான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கம்பியை என்னை அழைத்து சென்றால் ஆஜர் செய்வேன் என்று கூறியதன் பேரில் நாங்கள் இருவரும் ஆய்வாளருடைய வாகனத்தில் சென்றோம் என்றும் வழக்கின் எதிரி இராமச்சந்திரன் தனது வீட்டில் இருந்த எடுத்த ஆஜர் படுத்திய கம்பியை எங்கள் இருவர் முன்பும் சாட்சியாக வைத்து காவல் ஆய்வாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் மாரி மகன் மணியும் கையெழுத்து செய்தோம் என்று போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.